## மதுராந்தகம் இடைத்தேர்தல்:

# கழக வேட்பாளர் வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்து பிரச்சாரம்!

### பொதுமக்களிடம் தேர்தல் பொறுப்பாளர் எ.வ.வேலு வாக்குச் சேகரித்தார்!




மதுராந்தகம், செப்.24-

மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமனை ஆதரித்துக் கழகத் தேர்தல் பொறுப்பாளரும் முன்னாள் அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றியத்தில் பொதுமக்களிடம் வாக்குச் சேகரித்தார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் வசந்தவேல், செங்கம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிரி, செய்யூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பனையூர் பாபு, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றியச் செயலாளர் ஓ.கே.கண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கடமலைபுத்தூர், எடையாளம், மி.சித்தாமூர், களத்தூர், கொங்கரை மாம்பட்டு, கீழ்அத்தி வாக்கம், புரகால், அன்னங்கால், கூனங்கரணை, ஒரத்தி, வேப்பங்கரணை, வடமணிபாக்கம், விண்ணம்பூண்டி, தின்னலூர், அனந்தமங்கலம், சிறுதாமூர், முருங்கை, நெடுங்கல், கரசங்கால், வெளியம்பாக்கம், சமத்துவபுரம் ஆகிய ஊராட்சிகளில் இவ்வாக்குச் சேகரிப்பு நடைபெற்றது. அதுபோது, அவ்வூராட்சிகளைச் சேர்ந்த கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## ஆண்டியும் போண்டியும்



**ஆண்டி :** ஏன்ய்யா; தினமலரில் அந்துமணி பதில்களில் த.வெ.க. அரசை கண்மூடித்தனமாக ஆதரித்தும், தி.மு.க.வை கடுமையாக எதிர்த்தும் தினம் தினம் வருகிறதே... பார்த்தியா...?

**போண்டி :** **ஆமாய்யா; பார்த்தேன். அந்துமணி தினமலரையே ஒழுங்காகப் படிப்பதில்லை போல் தெரிகிறது. அதுவும் டீக்கடை பெஞ்ச்சை படிப்பதே இல்லை போல் தெரிகிறது. அதனால்தான் த.வெ.க. அரசின் லட்சணம் தெரியாமல் உளறுகிறார் 'அந்துமணி'.**

## ஒன்றிய அரசின் கொள்கையை அமல்படுத்துமாறு நீதிமன்றம் ஒரு மாநிலத்தைக் கட்டாயப்படுத்த முடியாது!

# தமிழ்நாட்டில், தமிழ் - ஆங்கிலம் என்னும் இருமொழிக் கொள்கைதான்! இந்தித் திணிப்பை ஒருபோதும் தமிழ்நாடு ஏற்காது!

### திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, செப். 24–

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

இந்தியாவில், டாக்டர் அம்பேத்கர் தலைமையில் அமைந்த வரைவுக் கமிட்டி உருவாக்கிய அரசியலமைப்புச் சட்டம் மக்களாகிய "நமக்கு நாமே வழங்கிக் கொள்ளும் அரசியலமைப்புச் சட்டம்" என்ற பீடிகையோடுதான் தொடங்கும். அதில் நமது அரசு (எக்கட்சி ஆட்சி செய்தாலும்), 'இறையாண்மை மிக்க, சமதர்ம, மதச் சார்பற்ற, ஜனநாயகக் குடியரசு என்ற கொள்கையின் அடிப்படையின்கீழ் என்றும் இயங்கி வரும் அரசு' என்றே அந்த முகவுரை, பீடிகை (Preamble) அமைந்துள்ளது; இது நமது அடிக்கட்டுமானம் (The basic Structure of the Constitution) ஆகும். இதனை எந்த ஆட்சியும் கைவிட முடியாது, கூடாது என்பது உச்சநீதிமன்றத்தின், அரசியலமைப்புச் சட்டத்தின் பல தீர்ப்புகள்மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற நீதிபதிகள், அரசியலமைப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல!

உச்சநீதிமன்றமும் அதில் தீர்ப்பு எழுதும் நீதிபதிகளும்கூட, இந்தப் பிரகடனத்திற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் உட்பட்டவர்களே தவிர, அப்பாற்பட்டவர்கள் அல்ல.

இரண்டாவது, உச்சநீதிமன்றமோ, உயர்நீதிமன்றமோ அரசுகள் கொண்டு வந்து நிறைவேற்றும் சட்டம் செல்லுமா, செல்லாதா என்று தங்களுக்கு வந்த வழக்குகளில் தீர்ப்புக் கூற முடியுமே தவிர, புதிதாக சட்டம் இயற்றும் அதிகாரமுள்ள சட்டமன்ற, நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை உச்சநீதிமன்றமே தமது கையில் எடுத்துக் கொள்ள முடியாது.

மூன்றாவதாக, அரசுகளின் கொள்கை முடிவு (Policy Decision) என்ற நிலைப்பாட்டில் தலையிட உரிமையற்றவை உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் என்பது காலங்காலமாக நடைமுறையில் இருந்து வருகின்ற முறை.

**இந்தியா ஒரு கூட்டாட்சியே தவிர, ஒற்றை அரசு அல்ல!**

நான்காவது, மாநிலங்கள் என்பவை ஒன்றிய அரசிடம் கப்பங்கட்டி வாழும் பழைய கால சிற்றரசுகள் அல்ல; மாநிலங்கள் இணைந்த அமைப்பே இந்தியா – அதாவது பாரதம் என்ற கூறு (Article) தான் நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முதலாவது பிரிவு. (India that is Bharat, Shall be the union of state...).

அதாவது இந்தியா ஒரு கூட்டாட்சியே (Federal) தவிர, ஒற்றை அரசு (Unitary Government) அல்ல.

அண்மையில், உச்சநீதிமன்றத்தில் ஜஸ்டிஸ் பி.வி.நாகரத்தினா, ஜஸ்டிஸ் அகஸ்டின் ஜார்ஜ் மாசிஹ் அமர்வு, நவோதயா பள்ளிகளைத் தமிழ்நாட்டில் அமைத்தே தீரவேண்டும் என்றும், அதற்கு நிலங்களைத் தேட மூன்று மாதக் கெடு என்றும் கூறியிருப்பது எவ்வகையில் சட்டப்படி சரியாகும்?

1986 இல் ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது, அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு அப்போதைய தமிழ்நாடு அரசு தனது எதிர்ப்பினைத் தெரிவித்தது;

காரணம், நவோதயா பள்ளி என்பது தமிழ்நாடு அரசின் இருமொழிக் கொள்கைக்கு எதிரானது.

**தமிழ், ஆங்கிலம் தவிர, இந்தி மொழியைத் தமிழ்நாடு அரசு ஏற்காது!**

இரு மொழிக் கொள்கையை 1967 இல் அறிஞர் அண்ணா தலைமையில் அமைந்த தி.மு.க. அரசு கொள்கை முடிவாக சட்டமன்றத்தில் நிறைவேற்றி, தமிழ், ஆங்கிலம் தவிர, ஹிந்தி மொழியைத் தமிழ்நாடு அரசு ஏற்காது; காரணம், அது ஒரு பண்பாட்டுப் படையெடுப்பு என்பதை ஒருமனதாகக் கூறியதோடு, கடந்த 59 ஆண்டுகளுக்குமேல், பல கட்சி அரசுகள் வந்த நிலையிலும், ஏன் குடியரசுத் தலைவர் ஆட்சி, ஆளுநர் ஆட்சி போன்ற இடைக்கால அரசுகள் (டில்லி அரசுதான் அவை) வந்தபோதும், இன்றுவரை அது நடைமுறையில் உள்ள ஒன்று ஆகும்!



தற்போதுள்ள த.வெ.க. அரசின் கொள்கை முடிவும்கூட, இருமொழிக் கொள்கைதான்.

கல்வி என்பது, முன்பு நெருக்கடி காலத்தில் மாநிலப் பட்டியலிலிருந்து ஒத்திசைவுப் பட்டியலுக்கு (Concurrent List) மாற்றப்பட்ட ஒன்று.

அதன்படிகூட, அது யூனியன் லிஸ்ட் என்ற ஒன்றியப் பட்டியலுக்கு மாற்றப்படவில்லை; எனவே, மாநிலக் கல்வியைத் தன்னிச்சையாக எடுத்துக்கொண்டு, ஒன்றிய அரசின் திணிப்புகளை ஏற்க மறுக்கும் எந்த மாநில அரசு மீதும், தனது திட்டமான ஹிந்தி, சமஸ்கிருதத்தை த் திணிக்க ஒன்றிய அரசுக்கு ஒருபோதும் அதிகாரம் கிடையாது!

**இந்தியைச் சொல்லிக் கொடுக்கும் தனி அமைப்புகளைத் தமிழ்நாடு அரசு தடுக்கவில்லை!**

இத்தனை சட்டத் தெளிவுகளும், நடைமுறையும் பின்பற்றப்படும் இப்பிரச்சினையில், மொழி என்பது உணர்வுப்பூர்வமான ஒன்று என்று தெரிந்தும், "ஏன், ஹிந்திப் படித்தால் என்ன?' என்று கேட்டு, இத்தகைய திணிப்புகளைக் கொண்டுவர முயற்சிப்பது ஏற்கத்தக்கதல்ல. ஹிந்தியைச் சொல்லிக் கொடுக்கும் தனி அமைப்புகளைத் தமிழ்நாடு அரசு தடுக்கவில்லை.

(எடுத்துக்காட்டு: தட்சண பாரத, ஹிந்தி பிரச்சார சபாக்கள், சி.பி.எஸ்.இ. பள்ளிகள் உள்ளன).

'தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்றிய அரசின் நிதியால் செயல்படும் நவோதயா பள்ளிகளை நிறுவ வேண்டும்' என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்ததை எதிர்த்து, தமிழ்நாடு அரசு தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த முறை இவ்வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற அமர்வு, தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகளை அமைப்பதற்கு, இடங்களைத் தேர்வு செய்வது தொடர்பாக மூன்று வாரத்திற்குள் விளக்கம் அளிக்கவேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட்டிருந்தது.

மேலும், நவோதயா பள்ளிகளைத் தமிழ்நாடு மட்டும், புறக்கணிப்பது ஏன்? என்று கேள்வி கேட்டுள்ளது!

தமிழ்நாடு அரசு சார்பில் வாதாடிய மூத்த வழக்குரைஞர் ஜெய்தீப் குப்தா, சரியான வாதத்தை மிகத் துல்லியமாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் முன் வைத்துள்ளார்!

ஒன்றிய அரசின் கொள்கையை அமல்படுத்துமாறு

நீதிமன்றம் ஒரு மாநிலத்தைக் கட்டாயப்படுத்த முடியாது!

"தமிழ்நாடு தற்போது இருமொழிக் கொள்கையைப் பின்பற்றி வருகிறது.

நவோதயா பள்ளிகளில் மும்மொழிக் கொள்கை பின்பற்றப்பட்டு வருகிறது. மேலும், ஹிந்தியும், அப்பள்ளிகளில் இடம்பெறுவதைத்தான் அரசு தீர்க்கமாக எதிர்க்கிறது.

இந்த விவகாரம் வெறும் ஹிந்தி தொடர்பானது மட்டுமல்ல; மாநிலத்தின் கொள்கை வகுக்கும் அதிகாரம்; மற்றும் கூட்டாட்சித் தத்துவம் தொடர்பானதும் ஆகும்.

நவோதயா பள்ளிகளைவிடச் சிறந்த கல்வியை (தமிழ்நாடு) மாநில அரசே வழங்கி வருகிறது.

தவிர, நவோதயா பள்ளிகள் திட்டம் மாநிலங்களுக்குக் கட்டாயமில்லை என்பதால், ஒன்றிய அரசின் கொள்கையை அமல்படுத்துமாறு நீதிமன்றம் ஒரு மாநிலத்தைக் கட்டாயப்படுத்த முடியாது.

நவோதயா பள்ளிகள் தமிழ்நாட்டில் கூடுதல் நிதிச் சுமை.

**எந்தச் சட்டப் பிரிவின்கீழ் ஏற்றுக் கொள்ளத் தகுந்தது?**

இதில் குறுக்கிட்ட நீதிபதி திருமதி பி.வி.நாகரத்தினா அவர்கள், "உங்கள் மன நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில் ஹிந்தி மொழி கற்பிப்பதை முற்றிலும் தவிர்க்க முடியாது" என்று கூறியிருப்பது எந்தச் சட்டப் பிரிவின்கீழ் ஏற்றுக் கொள்ளத் தகுந்தது என்று விளக்குவாரா?

தேவையில்லாமல், 'குளவிக் கூட்டில் கைவிடுவது' போன்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கூறலாமா?

மாண்புக்குரிய ஜஸ்டிஸ் பி.வி.நாகரத்தினா அவர்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1937–1938 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் அதுவரை இல்லாத கட்டாய ஹிந்தியைப் பள்ளிகளில் திணித்த அன்றைய சென்னை மாகாண முதலமைச்சர் 'சிரீமான்' சி.இராஜகோபாலாச்சாரியார் அவர்களே, 1967–களில் தமிழ்நாட்டில், "Hindi Never, English Ever" என்று முழங்கியவர் என்ற வரலாற்றை அறியவேண்டும்.

சமஸ்கிருத கலாச்சாரத்தினைத் திணிக்கக் கால்கோள் விழா செய்ய முயற்சிக்கலாமா?

உச்சநீதிமன்ற நீதிபதிகள் இப்படி ஹிந்தித் திணிப்பு என்ற வட மொழி சமஸ்கிருத கலாச்சாரத்தினைத் திணிக்கக் கால்கோள் விழா செய்ய முயற்சிக்கலாமா?

இது அரசியலமைப்புச் சட்ட விரோதம் மட்டுமல்ல; மக்களாட்சியின் மாநில உரிமைகள் – பண்பாட்டுப் பாதுகாப்பு உரிமைகள் பறிப்பும் ஆகும்! இது தேவையின்றி, கிளர்ச்சிகளுக்கு வழிவகுப்பதாகிவிடும்!

அமைதிப் பூங்காவான தமிழ்நாட்டில், விரும்பத்தகாத ஒரு நிலையை உருவாக்கக் கூடாது. அமைதிக்குப் பங்கம் ஏற்படும் நிலை உருவாகும் நிலை தவிர்க்கப்பட வேண்டும். இம்மாதிரி திணிப்பு முயற்சிகள் கூடாது.

**ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல!**

அதுவும் கொள்கை முடிவுகளுக்கு எதிராக நீதிமன்றம் சொல்வதும், நிபந்தனை விதிப்பதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல!

வேலியே, பயிரை மேய எத்தனிக்கலாமா?

இவ்வாறு கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகம் - தாராபுரம் தொகுதிகளில் தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து மல்லை சி.ஏ.சத்யா பிரச்சாரம்!

*சென்னை, செப். 24 -*

*திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*06/10/2026 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவுள்ள மதுராந்தகம்/ தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் திராவிட வெற்றிக் கழகத்தின் தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் தேர்தல் பணிக் குழு எனது தலைமையில் (மல்லை சி ஏ சத்யா) சுற்றுப் பயணம்*

*26/09/2026 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் மதுராந்தகம் பொதுக்கூட்டம்*



*27/09/2026 ஞாயிற்றுக்கிழமை அச்சிறு பாக்கம் பேரூராட்சி/ஒன்றியம்*

*28.09.2026- திங்கட்கிழமை மதுராந்தகம் வடக்கு ஒன்றியம்*

*29.09.2026 - செவ்வாய்க்கிழமை அச்சிறுபாக்கம் வடக்கு ஒன்றியம்*

*30.09.2026 - புதன் கிழமை தாராபுரம்*

*01.10.2026 -வியாழக் கிழமை தாராபுரம்*

*02.10.2026 - வெள்ளிக் கிழமை மதுராந்தகம் தெற்கு ஒன்றியம்*

*03.10.2026 - சனிக்கிழமை அச்சிறு பாக்கம் தெற்கு ஒன்றியம்*

*04.10.2026 - ஞாயிற்றுக்கிழமை இருசக்கர வாகனப் பிரச்சாரம் மாமண்டூரில் தொடங்கி கருங்குழி பேரூராட்சி/ மதுராந்தகம் நகரம்/அச்சிறுபாக்கம் பேரூராட்சியில் மாலை 05 மணி பிரச்சாரம் நிறைவு.*

*மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்ட மன்ற தொகுதி தேர்தல் பணிக் குழு நிர்வாகிகள் மேற்கண்டவாறு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரிக்கும் பணிகளை திமுக தேர்தல் பணிக்குழு நிர்வாகிகளுடன் கலந்து பேசி ஒருங்கிணைத்திட அன்புடன் வேண்டுகின்றேன்*

*இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

## இந்தியத் தேர்தல் ஆணையர்களிடையே முரண்பாடு:

# தன்னிச்சையாக செயல்படும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார்!

### எஸ்.ஐ.ஆர். விவகாரம்: 10 மாதங்களில் 14 முறை குற்றச்சாட்டு கூறிய இரு ஆணையர்கள்!

புதுடெல்லி, செப். 24 –

இந்திய தேர்தல் ஆணையத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இரண்டு தேர்தல் ஆணையர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் ஜனநாயக தூணாக விளங்கும் தலைமை தேர்தல் ஆணையத்தில் தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள் சம அந்தஸ்துடன் செயல்பட்டு வருகின்றனர். கடந்த 2023ம் ஆண்டு சட்ட விதிகளின்படி, ஆணையத்தின் அனைத்து முக்கிய முடிவுகளும் ஒருமனதாக அல்லது பெரும்பான்மை அடிப்படையில் மட்டுமே முறைப்படி எடுக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. இதற்கிடையே, கடந்த 2025ம் ஆண்டு ஜூன் மாதம் பீகாரில் தொடங்கப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (எஸ்ஐஆர்) நாடு முழுவதும் 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தீவிரமாக விரிவுபடுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கையின் மூலமாக, சுமார் 13 கோடி வாக்காளர்களின் பெயர்கள் வரைவு வாக்காளர் பட்டியலிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டன. இது ஜனநாயக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் தங்களுக்கு வாக்களிக்கும் உரிமை பறிக்கப்படுகிறதோ என்ற கடுமையான சந்தேகத்தையும் பெரும் விவாதத்தையும் ஏற்படுத்தி இருந்தது. இந்நிலையில், தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தலைமையிலான நிர்வாகம் எடுத்து வரும் முடிவுகளுக்கு எதிராக, மற்ற இரண்டு தேர்தல் ஆணையர்களான சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் கடந்த 10 மாதங்களில் 14 முறை எழுத்துப்பூர்வமாக கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ள அதிரடி தகவல்கள் தற்போது அம்பலமாகியுள்ளன.

புதிய வாக்காளர் சேர்க்கைக்கான படிவம் 6ல் ஒன்றிய அரசு விதிகளில் திருத்தம் செய்யாமல் சட்டவிரோதமாக புதிய நிபந்தனைகளை சேர்த்தது, கள அளவில் செயல்படும் வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அதிகாரங்களை பறித்து தேர்தல் ஆணைய கம்ப்யூட்டர் இணையதளத்தை டெல்லியில் இருந்து முழுமையாக கட்டுப்படுத்த முயன்றது உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதுகுறித்து ஆணையக் கூட்டத்தில் முறையிட்ட சுக்பீர் சிங் சந்து, 'எங்களுக்கு தெரிவிக்காமல் மேற்கொள்ளப்பட்ட இந்த தன்னிச்சையான நடவடிக்கைகள் சட்டவிரோதமானவை' என்று காட்டமாக எச்சரித்ததோடு, ஒன்றிய அமைச்சரவை செயலாளருக்கும் தனித்தனியாக கடிதம் அனுப்பி தங்கள் எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.

குறிப்பாக, மேற்குவங்கத்தில் நீதிமன்ற அதிகாரிகள் (நீதிபதிகள்) வாக்காளர் பட்டியலில் சேர்த்த வாக்காளர்களுக்கு எதிராக தேர்தல் ஆணையத்தின் சார்பில் யாருடைய அனுமதியுடன் மேல்முறையீடு செய்யப்பட்டது என்பது குறித்தும், உச்சநீதிமன்ற உத்தரவு இருந்தும் மென்பொருள் (தேர்தல் ஆணைய சாப்ட்வேர்) கோளாறால் கோவாவில் 97 தகுதியான வாக்காளர்கள் நீக்கப்பட்ட விவகாரத்திலும் ஆணையர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். இந்த அடுக்கடுக்கான புகார்கள் மற்றும் கடந்த 9ம் தேதி நடந்த ஆலோசனை தொடர்பாக தேர்தல் ஆணையத்திடம் விளக்கம் கேட்டும் இதுவரை எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. அரசமைப்புச் சட்டத்தின் 324வது பிரிவை நிலைநிறுத்த வேண்டிய ஒரு தன்னாட்சி அமைப்பிற்குள், பெரும்பான்மை ஆணையர்களின் கருத்துகளை புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கப்படுவது தேர்தல் நடைமுறையின் வெளிப்படைத் தன்மைக்கே பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ள நிலையில், இதற்கு முறையான தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

**தேர்தல் ஆணையத்தின் கட்டமைப்பு மற்றும் 2023 சட்டம் சொல்வது என்ன?**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 324வது பிரிவின்படி தேர்தல் ஆணையம் செயல்படுகிறது. இதில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஒருவரும், இரண்டு தேர்தல் ஆணையர்களும் இருப்பார்கள். சட்டப்படி மூவருமே சமமான அந்தஸ்து கொண்டவர்கள்.. தலைமைத் தேர்தல் ஆணையர் என்பவர் சமமான பவர் கொண்டவர்களில் முதன்மையானவர் மட்டுமே தவிர, தனிச்சையாக சர்வாதிகார முடிவுகளை எடுக்க அவருக்கு அதிகாரம் கிடையாது.

2023 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் பிற தேர்தல் ஆணையர்கள் நியமனச் சட்டத்தின் பிரிவு 18ன் படி:

1. ஆணையத்தின் அனைத்து அலுவல்சார் நடவடிக்கைகளும், முடிவுகளும் முடிந்தவரை ஒருமனதாகவே எடுக்கப்பட வேண்டும்.

2. ஒருவேளை கருத்து வேறுபாடு ஏற்பட்டால், பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்தின் அடிப்படையிலேயே முடிவு செய்யப்பட வேண்டும்.

3. ஆணையத்தின் செயல்பாட்டு விதிகள் மற்றும் வேலைப் பகிர்வுகளை மாற்றியமைக்க வேண்டும் என்றாலும், அதற்கு மூன்று ஆணையர்களின் ஒருமனதான ஒப்புதல் அவசியம்.

ஆனால், இந்த விதிகள் மீறப்படுவதாக ஏப்ரல் 16 அன்று சுக்பீர் சிங் சாந்து அதிகாரிகளுக்குக் கடிதம் எழுதினார். அதில், தேர்தல் ஆணையத்தின் 3 அதிகாரிகளின் ஒருமித்த ஒப்புதல் இன்றியே பல சுற்றறிக்கைகளும் உத்தரவுகளும் ஆணையத்தின் பெயரில் வெளியிடப்பட்டு வருவதாகக் குற்றம் சாட்டினார். அடுத்த எட்டு நாட்களில், ஏப்ரல் 24 அன்று விவேக் ஜோஷியும் இதே விவகாரத்தை எழுப்பி, அரசியலமைப்புப் பிரிவு 324 மற்றும் 2023 சட்ட விதிகளின்படி ஆணையத்தின் முழு ஒப்புதல் இல்லாமல் எந்த அறிவிப்பும் வெளியாகக் கூடாது என்று கண்டிப்புடன் தெரிவித்தார்.

**இரண்டு ஆணையர்கள் எழுப்பிய 4 முக்கியப் புகார்கள்!**

ஆணையர்கள் சாந்து மற்றும் ஜோஷி எழுப்பிய 14 ஆட்சேபனைகளும் தேர்தல் ஆணையத்தின் மிக முக்கியமான நான்கு அடிப்படைப் பணிகளை மையமாகக் கொண்டுள்ளன.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட மூன்று தேர்தல் ஆணையர்களில், பெரும்பான்மையான இரண்டு ஆணையர்களின் கருத்துகள் புறக்கணிக்கப்பட்டு, தன்னிச்சையாக முடிவுகள் எடுக்கப்பட்டு வந்ததாக எழுந்துள்ள இந்தக் குற்றச்சாட்டுகள், இந்திய ஜனநாயகத்தின் தூணாக விளங்கும் தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமை மீது மிகப்பெரிய கேள்விகளை எழுப்பி உள்ளன. தேர்தல் ஆணைய வட்டாரங்கள் அனைத்து முடிவுகளும் ஒருமனதாகவே எடுக்கப்பட்டு வருவதாக வெளியே செய்திகள் வந்தாலும்.. அவை எல்லாம் பொய் என்பது தற்போது தெரிய வந்துள்ளது. இந்த கடிதங்கள் மூலம் தேர்தல் ஆணையத்தில் ஆல் இஸ் நாட் வெல் என்பது தெரிய வந்துள்ளது!